# வருடாந்த அறிக்கை – 2015


இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு)

தொலைபேசி: 011-2676650, தொலைமடல்: 011-2676646, மின்னஞ்சல்: info@slic.gov.lk, வலைக்கடப்பீடம்: www.slic.gov.lk

# வருடாந்த அறிக்கை – 2015

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
இல: 46, 48, கொட்டா வீதி, கொழும்பு -08

# அட்டவணை


| | பக்க இல. |
|---|---|
| ஆணைக்குழுவின் உறுப்பினர்க | 1 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் | 2 |
| ஆணையாளர் மீளாய்வு | 3-4 |
| 1.0 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு | 5 |
| 1.1 அறிமுகவுரை | 5 |
| 1.2 நோக்கு | 5 |
| 1.3 பணி | 5 |
| 1.4 குறிக்கோள்கள் | 5-6 |
| 1.5 ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள் | 6-7 |
| 1.6 அமைப்பாண்மை கட்டமைப்பு | 8 |
| 1.7 மனித வளம் | 9 |
| 2.0 செயலாற்றுகை | 10 |
| 2.1 விழிப்புணர்ச்சி கருத்தரங்குகளும் மற்றும் பயிற்சிப் பட்டறைகளும் | 10-12 |
| 2.2 மாகாணமட்டத்தில் புத்தாக்கங்களை தெரிவு செய்தலும் தேசிய மட்டத்திற்கு பொருத்தமானவற்றை மதிப்பீடு செய்தலும் | 12-14 |
| 2.3“இளம் புத்தாக்குனர் கழகம்” – “பள்ளிக்கூட புத்தாக்கங்கள் பற்றிய தொலைக்காட்சியில் காட்சி” சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு தொலைக்காட்சி நிதழ்ச்சித் திட்டம் | 14-16 |
| 2.4 “சஹசக் நிமவும்” – புத்தாக்கம், புதியன கண்டுபிடித்தல் மற்றும் போட்டிக்கான கண்காட்சி | 16-23 |
| 2.5 புத்தாக்குனர்களுக்கான ஜனாதிபதி விருதுகள் | 23-24 |
| 2.6 சர்வதேச புத்தாக்கம் மற்றும் புதுமை கண்டுபிடித்தல் கண்காட்சியில் புத்தாக்குனர் பங்குபெறல் | 25-26 |
| 2.7 புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துவதில் துணைமை | 27-29 |
| 2.7.1புத்தாக்குனர் நிதியம் | 29-30 |
| 2.8 மனிதவள அபிவிருத்தி | 29-30 |
| 3.0 நிதியியல் கூற்று | 31-48 |
| 4.0 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 49-56 |

# ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

**(2015 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து மே, 31 ஆம் திகதி வரை)**

திரு. தீபால் சூரியஆராய்ச்சி
**ஆணையாளர்**

கலாநிதி. காமிக பிரதாபசிங்க
**உதவி ஆணையாளர்**

(2015 மார்ச் மாதம் 16 ஆம் திகதி உதவி ஆணையாளர் கலாநிதி. காமிக பிரதாபசிங்க இராஜினாமா செய்ததை தொடர்ந்து இந்தப் பதவி வெற்றிடமாகவுள்ளது.)

திரு. நளின் டி. கருணாசிங்க
**உதவி ஆணையாளர்**

திருமதி. விசாக வனசிங்க
**திறைசேரி பிரதிநிதி**

**(2015 டிசம்பர் 10 இலிருந்து 31 வரை)**

கலாநிதி. சி. மகேஸ் எதிரிசிங்க
**ஆணையாளர்**

திரு. எச். எம். ஆர். கிரில்லே
**உதவி ஆணையாளர்**

திருமதி. கல்பனி இராஜபக்ஷ
**உதவி ஆணையாளர்**

திருமதி. விசாக வனசிங்க
**திறைசேரி பிரதிநிதி**

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள்

**(டிசம்பர் 10 இலிருந்து 2015 டிசம்பர் 31 வரை)**

திருமதி. விசாகா வணசிங்க
**திறைசேரி பிரதிநிதி**

திரு. எச். எம். ஆர். கிரில்லே
**உதவி ஆணையாளர்**

திருமதி. கல்பனி இராஜபக்ஷ
**உதவி ஆணையாளர்**

திரு. எம். சி. கமகே
**உள்ளக கணக்காய்வாளர்**
**விஞ்ஞான, தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சு**

திருவதி. சுஜீவா டீ சில்வா
**கணக்காய்வாளர் திணைக்கள பிரதிநிதி**

**ஆணையாளர் மீளாய்வு**

மனித வரலாற்றினை எடுத்து நோக்கினால் நாகரீக வளர்ச்சிக்கும் பொருளாதார நடவடிக்கைகளின் மேம்பாட்டிற்கும் புதியன கண்டுபிடிக்கப்படலே ஆதாரமாக இருந்து வருகிறது. அடுத்துவரும் தசாப்தங்களில் இதே நிலையினை இலங்கை அடைவதற்கு நாம் புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளியலை நோக்கி நெறிப்படுத்தப்படல் வேண்டும். இது தொடர்பில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் பங்கு அதீதமாகும்.

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஊக்குவிப்பு சட்டத்தினை ஆதரிக்கும் வகையில் அமைந்துள்ள ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பின்வரும் ஐந்து பிரதான வகுதிக்குள் அடங்கும்.

அந்த பிரதான வகுதிகளாவன,

1) புத்தாக்கங்களின் தர மேம்படுத்துகை
2) புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துதல்
3) புத்தாக்குனர்களுக்கு சக்தியளித்தல்
4) இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்ந்து நீடித்து நிலைத்திருத்தல்
5) இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் பதவியணியினரின் செயற்றிறனை அபிவிருத்தி செய்தல்

மேற்கூறப்பட்ட பிரதான பரப்பெல்லைகளில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினரால் ஆற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் விரிவான விபரங்கள் வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கீழ்குறிப்பிடப்பட்டவை வருடத்தில் ஆற்றப்பட்ட பிரதான நடவடிக்கைகளாகும்.

- தரமான புத்தாக்கங்களின் காட்சிப்படுத்தலுடன், புத்தாக்கங்கள் மற்றும் புதிது புனைதலிற்கான தேசிய கண்காட்சியான “சஹசக் நிமவும் – 2015” இனை நடாத்துதல்.

- புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துகை செய்தற்கு புதிய பாதைகளை வகுக்கும் முகமாக தனியார் துறையினர்களுடன் கூட்டிணைவினை தாபித்தல்.

- இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் பதவியணியினருக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல்.

- புத்தாக்கங்களை காட்சிப்படுத்துவதும் ஜெனிவாவில் இடம்பெறுவதுமான ஜெனிவா சர்வதேச கண்காட்சியில் இலங்கை புத்தாக்குனர்கள் பங்குகொள்வதற்கு வாய்ப்புகளை வழங்குவதுடன் அக்கண்காட்சியில் தங்கப்பதக்கங்களை வென்றெடுத்த புத்தாக்குனர்களுக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமானத் தளத்தில் பிரமுகர்கள் கூடத்தில் வரவேற்பு அளிக்கப்படல்.

- இலங்கை வாழ் மாணவர் மனதில் ஆக்கற்றிறனை ஊக்குவிப்பதற்கு சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு அலைவரிசையில் "இளம் புத்தாக்குனர் கழகம்" எனும் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படல்.

எமது செயற்பாடுகளாவன, புத்தாக்குனர்களிடையே ஒரு சார்ந்திருக்கும் மனநிலையை ஏற்படுத்தாது அவர்கள் தனித்துவமாக புதிது புனையக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவதாக அமைவதற்கே நாம் எப்போதும் முயல்கின்றோம். ஏனெனில், தனிப்பட்ட ஒரு அமைப்பாண்மையினால் சகல புத்தாக்குனர்களுக்கும் அர்த்தமுள்ள வகையில் உதவியாக இருத்தல் முடியாது. ஆனால் ஒரு சமூகமானது புத்தாக்குனர்களுக்கு அவர்கள் புதிது புனையவும் அவற்றினை வர்த்தகமயப்படுத்துகை செய்யவும் உதவியாக இருக்கும்.

அடுத்து வரும் சில வருடங்களுக்குள் அதாவது 2020 ஆம் ஆண்டிற்குள், புத்தாக்கத்தை அடிப்படையாகக்கொண்ட சமூகம் என்ற சவாலை நாம் சாதிப்பதற்கு, நாட்டின் பொருளாதாரத்திற்கு சக்தியளிக்கக்கூடிய ஒரு உலகளாவிய காரணி என்ற வகையில் புத்தாக்குனரினை ஆக்குவதற்கான திட்டத்தை எமது அமைப்பாண்மை தயாரிக்கின்றது.

எம்மால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு எமக்கு ஊக்கத்தையும் வழிகாட்டலினையும் வழங்கிய கைத்தொழிற்துறை வர்த்தக அமைச்சர் கௌரவ. ரிசாட் பதுருதீன், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ. சுசில் பிரேம ஜயந்த, விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திருமதி. ஆர். விஜயலக்ஷ்மி மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் சகல பதவியணியினர் ஆகிய சகலருக்கும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் சார்பில் எனது மனப்பூர்வமான நன்றியை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அத்துடன் ஆணைக்குழுவின் சகல நடவடிக்கைகளின் போதும் தமது ஒத்துழைப்பை அயராது வழங்கிய ஆணைக்குழுவின் சகல உறுப்பினர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவிக்கின்றேன். இறுதியாக ஆணைக்குழு வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லப்படலிற்கு அர்ப்பணிப்புடன் ஈடுபாட்டுடன் கடமையாற்றிய ஆணைக்குழுவினைச் சார்ந்த சகல அலுவலர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி. C. மகேஷ் எதிரிசிங்க

ஆணையாளர்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு.

# 1.0 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

## 1.1 அறிமுகவுரை

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் நிபந்தனைகளின் கீழ் இலங்கை புத்தாக்கங்களின் வளர்ச்சி, ஊக்குவிப்பு மற்றும் உற்பத்தி என்பனவற்றிக்காகவும் அவற்றுடன் தொர்புடைய நடவடிக்கைகளுக்காகவும் தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது ஒரு நியதிச் சட்ட சபையாகும். ஆணைக்குழுவானது விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அகப்பாட்டெல்லைக்குள் இயங்குகிறது.

2015 ஆம் ஆண்டு ஆணைக்குழுவின் அலுவலகமானது, இல. 525, யூனியன் பிளேஸ், கொழும்பு – 02 எனும் விலாசத்தில் அமைந்துள்ள கட்டிடத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ளது.

## 1.2 நோக்கு

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கத்தினூடாக சுபிட்சத்தை காணல்.

## 1.3 பணி

- தேசத்திற்கு புத்தாக்க செயற்றினை கொண்டுவருவதில் தலைசிறந்த உந்து விசையாளராக இருத்தல்.
- கருத்துக்களை செயல்முறை சார் பிரயோகங்களில் மாற்றீடு செய்வதற்கு துணைமை செய்யும் செயன்முறை முன்னோடியாக இருத்தல்.

## 1.4 குறிக்கோள்கள்

1.4.1 இலங்கை புத்தாக்குனர்களின் புத்தாக்கற் படைப்புத்திறனை ஊக்குவித்தல்.

1.4.2 புத்தாக்குனர்களுக்கு, தொழில்நுட்பவியல் உதவி, நிதியுதவி மற்றும் சட்ட உதவிகளை வழங்கல்.

1.4.3 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்திற்குரித்தான அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை மேற்கொள்ளல்.

1.4.4 மேற்கூறப்பட்ட சகல நடவடிக்கைகளையும் சாதிப்பதற்கு துணை செய்யும் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல்.

## 1.5 ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள்

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள்,செயற்பாடுகள் மற்றும் கடமைகள் என்பன சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

அ) புத்தாக்குனர்களின் புத்தாக்கங்கள் காப்புரிமை வழங்கப்படுதலிற்கு உரித்துடையதா என உறுதி செய்துகொள்வதற்கு அவர்களின் புத்தாக்கங்களை பரிசீலித்து அவர்களுக்கு தொழில்நுட்பவியல் உதவிகளை வழங்கல் மற்றும் ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய புத்தாக்குனர்களுக்கு காப்புரிமை விண்ணப்பங்களை தயாரிக்க உதவி செய்தல்.

ஆ) காப்புரிமை பெற்றுக்கொண்ட புத்தாக்கங்களையும் மற்றும் காப்புரிமை பெறப்படாது நிலுவையாக இருக்கும் புத்தாக்கங்களையும் விருத்தி செய்வதற்கு, நேர்த்தியாக்குவதற்கு நிதியுதவிகளை வழங்கல்.

இ) ஆணைக்குழுவின் நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு அமைவுற இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் புத்தாக்குனர்களுக்கு, காப்புரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் அவை சூறையாடப்படாது பாதுகாக்கப்படுவதற்கும் சட்ட ரீதியாக உதவியாக இருத்தல்.

ஈ) இலங்கைக்கு பயனளிக்கக்கூடிய புத்தாக்கங்களை மேலும் உற்பத்தி செய்வதற்கு அப்புத்தாக்கங்களின் முக்கியத்துவம் மற்றும் வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான சாத்தியத்தன்மை என்பவற்றை கருத்திற்கொண்ட பின்பு அரசின் கீழ் அடங்கும் நிறுவனங்கள் அரசின் பரிந்துரைப்புடன் அவர்களுக்கு நீண்ட கால கடன்களை வழங்கும்.

உ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களுக்கான சந்தையினை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தேடிக்கொள்வதற்கு உதவியாக இருத்தல்.

ஊ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களின் பெறுமதியினை அவர்களுக்கு அறியச்செய்யும் வகையில் வருடாந்தம் கண்காட்சிகளை “புத்தாக்கங்களுக்கான ஜனாதிபதி விருது” எனும் தலைப்பில் நடாத்தி அந்த கண்காட்சியின் விழாவின் போது புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்கள் தொடர்பில் பணப் பரிசையினையும் பதக்கங்களையும் வழங்குதல் என்பதுடன் இந்த விழாவின் போது, தெரிவுசெய்யப்படும் புத்தாக்கங்களாவன, விவசாயம், இரசாயனவியல், மருத்துவம், தேசிய பாதுகாப்பு, மருந்தகவியல், பௌதிகவியல், பாதுகாப்பு மற்றும் நலன்புரி பொதுப் பணிகள், போக்குவரத்து மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய துறைகளினை சார்ந்தவையாக இருத்தல் வேண்டும். அத்துடன் இந்த விருதுகளாவன தேசிய புத்தாக்குனர் என்றவகையில் முக்கியத்துவம் கொடுக்கப்படாது இலங்கையிலுள்ள சகல புத்தாக்குனர்களும் கருத்தில் கொள்ளப்பட்டு வழங்கப்படும்.

எ) ஒரு பொது ஆராய்ச்சி ஆய்வுகூடம் மற்றும் சோதனை நிலையத்தை தாபித்தல். அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்குனர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட தமது புத்தாக்கங்களை மேலும் சீர்படுத்திக் கொள்வதற்கு இந்த ஆராய்ச்சிக் கூடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சோதனை சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

ஏ) இலங்கை வாழ் மக்களிடையே புதிது புனைதல் மற்றும் படைப்பாக்கற்றிறன் என்பனவற்றை மேம்படுத்தவும் மற்றும் வருடாந்தம் இடம்பெறும் “ஆக்கற்றிறன் மிகு ஆராய்ச்சி போட்டியில்” “புத்தாக்கத்திற்கான ஜனாதிபதி விருது வைபவத்தின்” நடுவர்களால் மேலே பந்தி (ஊ) வில் கூறப்பட்டதும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய துறைகளில் புதிய படைப்புகளை படைத்தலில் துணைமையாக இருப்பதற்கும் மற்றும் அதில் வெற்றியாளர்களை தெரிவுசெய்து பணப்பரிசு மற்றும் பதக்கங்களை வழங்குவதற்கும்

அ) புத்தாக்கம், ஆராய்ச்சிகள் மற்றும் பொதுவான விஞ்ஞானம் என்பனவற்றில் தகவல்களை பிரசுரித்தலும் பரப்புவதற்கு
ஆ) புத்தாக்குனர்களிடையே கருத்துகளை பரிமாறிக்கொள்வதற்கு ஒரு ஒழுங்கு முறையில் மாதாந்தம் கூட்டத் தொடர்களை நடாத்துவதற்கு
இ) புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இலங்கை புத்தாக்குனர்களுக்கு உதவுதல் அல்லது அத்தகைய போட்டிகளில் அவர்களை பங்குபெறச் செய்வதற்கு பரிந்துரைத்தல்
ஈ) இலங்கை வாழ் இளைஞர்களிடையே படைப்பாற்றல் திறனை ஊக்குவிப்பதற்கு பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆக்கற்றிறன் சங்கங்களை ஒழுங்கமைத்தல்

## 1.6 அமைப்பாண்மை கட்டமைப்பு



## 1.7. மனித வளம்

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 2015 இல் பதவியணியினர் | 2015 டிசம்பர் 31 இல் உள்ளவாறான வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பணிப்பாளர் (சி.நி.அ.) | 01 | 01<br>ஒப்பந்த அடிப்படையில் | - |
| பிரதி/உதவி பணிப்பாளர் (கருத்திட்டங்கள்) | 01 | 01 | - |
| பிரதி/உதவி பணிப்பாளர் (நிதி) | 01 | 00 | 01 |
| நிகழ்ச்சித் திட்ட அலுவலர் | 03 | 03 | - |
| நிர்வாக அலுவலர் | 01 | 00 | 01 |
| கணக்கியல்/நிதி அலுவலர் | 01 | 01 | - |
| ஆராய்ச்சி உதவியாளர் | 05 | 04 | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 06 | 06 | - |
| சாரதி | 03 | 03 | - |
| அலுவலக உதவியாளர் | 02 | 01 | 01 |
| மொத்தம் | 24 | 20 | 04 |

# செயலாற்றுகை – 2015

## 2.0 செயலாற்றுகை

**பின்னணி**

2015 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நேரொத்த அமைச்சானது மாற்றப்பட்டதுடன் அது செப்டெம்பர் மாதம் வரையில் கைத்தொழிற்துறை மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் செயற்பட்டது. ஆணைக்குழுவின் அலுவலக பதவியணி உறுப்பினர்களுக்குரிய காலவரைறையானது நிறுத்தப்பட்டதினால் ஆணைக்குழுவானது 2015 மே மாதம் கலைக்கப்பட்டு புதிய ஆணைக்குழுவானது 2015 டிசம்பர் மாதம் நியமிக்கப்பட்டது. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் கருத்திட்ட பிரிவினைப் பொறுத்தவரையில், அதன் செயற்பாடுகளினை 2015 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் முன்னெடுப்பதற்கு நிதியத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், மூலதன செலவின் தேவைகளுக்கு பற்றாக்குறையும் ஏற்பட்டது.

மூலதன செலவினம் தொடர்பில் திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதியம், மற்றும் செலவிடப்பட்ட நிதியம் அத்துடன் 2015 ஆம் ஆண்டின் நிதியில் முன்னேற்றம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளது. (அட்டவணை 2.அ)

அட்டவணை 2.அ    மூலதன செலவினம் தொடர்பில் பெற்றுக்க்கொண்ட நிதியம் மற்றும் முழு மொத்தமான நிதியியல் முன்னேற்றமும்

| 2015 ஆம் ஆண்டின் பாதீட்டிலிருந்து, மூலதன செலவீட்டிற்காக அங்கிகரிக்கப்பட்ட நிதியம் | செலவினம் | நிதியியல் முன்னேற்றம் |
|---|---|---|
| ரூபாய். 53,350,000.00 | ரூபாய். 25,750,924.00 | 48.26% |

**2.1. விழிப்புணர்ச்சி கருத்தரங்குகளும் மற்றும் பயிற்சிப் பட்டறைகளும்**

2.1.1 பள்ளிக்கூட மாணவர்களின் புத்தாக்கங்கள் – மன்னார்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட தேசிய கண்காட்சியான “சஹசக் நிமவும்” கண்காட்சியில் மாகாண மட்டத்தில் பங்கு கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையை நோக்குமிடத்து, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து பங்கு கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையானது ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாக இருந்தமையால் புதிது புனைதலில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும்

முகமாக அப்பிரதேசங்களில் புத்தாக்கம் பற்றிய விழிப்புணர்ச்சி கருத்தரங்குகளினை நடாத்துதல் முக்கியமாக கருதப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆணைக்குழுவானது மன்னார் மாவட்டத்தில் மடு மற்றும் வன்னி கல்வி வலயங்களில் இரு விழிப்புணர்ச்சி கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தது. இதில் 1 AB, 1 C மற்றும் வகை 2 ஆகிய பள்ளிக்கூடங்களைச் சார்ந்த தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொள்ள அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து வன்னி கல்வி வலய கருத்தரங்கில் 215 எண்ணிக்கையான தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்குகொண்டனர். இந்த கருத்தரங்கின் போது புத்தாக்கம் மற்றும் புதிது புனைதல் தொடர்பில் அயமன் பிரோஸ் மற்றும் சாகுவி லதீப் ஆகிய புத்தாக்குனர்கள் உரையாற்றினர்.

திகதி: 2015 ஜூலை மாதம் 02

இடம்: சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

(மடு கல்வி வலயத்தினைச் சார்ந்த ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்காக கருத்தரங்குகள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும் மடு மாதா கோவில் திருவிழா காரணமாக கருத்தரங்குகள் முன்னெடுக்கப்பட இயலாது விட்டது.)

### 2.1.2 தேசிய விஞ்ஞான தினத்தை நினைவுபடுத்தும் முகமாக ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சிப் பட்டறை

தேசிய விஞ்ஞான தினத்தை நினைவுபடுத்தும் முகமாக ஒரு பயிற்சிப் பட்டறையானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் செயற்குழு அறை 'ஆ' வில் இடம்பெற்றதுடன் இந்தப் பயிற்சிப் பட்டறையானது, புத்தாக்கம் மற்றும் புதிது கண்டுபிடித்தலில் ஆர்வமுடைய மேல் மாகாணத்தைச் சார்ந்த பள்ளிக்கூடங்களில் 1 AB 1 C மற்றும் வகை 2 இனைச் சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக நடாத்தப்பட்டது. மாணவர்களின் உள்ளார்ந்திருக்கும் படைப்பாற்றல் திறனை மேம்படுத்தும் முகமாக 3 விரிவுரைகளாவன புத்தாக்கத்திறன் பாதையில் வெற்றியடைந்த புத்தாக்குனர்களாலும் மற்றும் சிறப்பாக செயற்படும் இளம் புத்தாக்குனர் கழகமொன்றின் பொறுப்பாசிரியராலும் ஆற்றப்பட்டது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் மேல் மாகாணத்தைச் சார்ந்த பள்ளிக்கூட மாணவர்களில் கிட்டத்தட்ட 300 பேரும் ஆசிரியர்களும் பங்குபற்றினர்.



உரு 01



உரு 02



உரு 03

உரு 01, 02 மற்றும் 03: தேசிய விஞ்ஞான தினத்தை நினைவுபடுத்தும் விதமாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற பயிற்சிப் பட்டறையுடன் தொடர்புடைய சில நிகழ்வுகள்.

## 2.2 மாகாணமட்டத்தில் புத்தாக்கங்களை தெரிவு செய்தலும் தேசிய மட்டத்திற்கு பொருத்தமானவற்றை மதிப்பீடு செய்தலும்

சகல மாகாணங்களிலுருந்தும் தேசிய மட்ட கண்காட்சிக்கு பொருத்தமான புத்தாக்கங்களை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தெரிவு செய்தது. இதற்கமைவுற தெரிவுகளாவன 2015 ஆம் ஆண்டின் மே மாதத்திலிருந்து ஜுலை மாதம் வரை இடம்பெற்றது. விபரங்கள் கீழே கூட்டலறையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.1 – ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை.

| மாகாணம் | மதிப்பீடு செய்யப்பட்ட இடம் | திகதி | தெரிவுசெய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | பள்ளிக்கூட வகுதி | பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவக வகுதி | திறந்த வகுதி |
| சப்ரகமுவ | தொழில்நுட்பவியல் கல்லூரி- இரத்தினபுரி | 2015.05.07 | 10 | - | 03 |
| வடமேற்கு | தொழில்நுட்பவியல் கல்லூரி- குருனாகல் | 2015.05.19 | 10 | 01 | 04 |
| கிழக்கு | மக்கள் கல்லூரி - மட்டக்களப்பு | 2015.05.28 | 18 | - | 12 |
| வடக்கு | தொழில்நுட்பவியல் கல்லூரி - யாழ்ப்பாணம் | 2015.05.30 | 15 | 01 | 02 |
| மத்திய | தொழில்நுட்பவியல் கல்லூரி - கண்டி | 2015.06.13 | 10 | - | 05 |
| தென் | தொழில்நுட்பவியல் கல்லூரி – மாத்தறை | 2015.06.18 | 10 | 02 | 11 |
| வட மத்தி | தொழில்நுட்பவியல் கல்லூரி - அநுராதபுரம் | 2015.06.26 | 15 | - | 05 |
| ஊவா | தொழில்நுட்பவியல் கல்லூரி – பதுளை | 2015.07.09 | 15 | - | 12 |
| மேற்கு | அசோகா கல்லூரி – கொழும்பு 10 | 2015.07.19 | 20 | 08 | 25 |





உரு 04

உரு 05





உரு 06

உரு 07

உரு 04, 05, 06, 07: புத்தாக்கங்களாவன மாகாணரீதியில் மதிப்பீடு செய்யப்பட்டபோது நிகழ்ந்த நிகழ்வுகள்.

### 2.3 "இளம் புத்தாக்குனர் கழகம்" – "பள்ளிக்கூட புத்தாக்கங்கள் பற்றிய தொலைக்காட்சியில் காட்சி" சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு தொலைக்காட்சி நிதழ்ச்சித் திட்டம்

மாணவர்களின் புத்தாக்கத் திறனை அதிகப்படுத்தும் நோக்குடனும் அதுபோன்று படைப்பாற்றல் திறன் அதுபோன்று புதியன கண்டுபிடித்தல் என்பவை தொடர்பில் மாணவ சமுதாயத்தினரை கவர்ந்திழுக்கும் முகமாகவும் "இளம் புத்தாக்குனர் கழகம்" எனும் தலைப்பிலான தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு

தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. 13 பாகங்களைக் கொண்ட இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2015 பெப்ரவரி மாதத்திலிருந்து 2015 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்போது பங்குபெறும் குழுக்களினை சார்ந்த மாணவர்களுக்கு அவர்களது நாளாந்த வாழ்க்கையில் அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் தொடர்பிலான ஒரு சிக்கலானது கூறப்பட்டு அதற்கான தொழில்நுட்பவியல் தீர்வு உடனடியாக தரும்படி கோரப்படும். மாணவர்கள், அவர்களுக்கு தரப்பட்ட சிக்கலுக்குரிய தீர்வினை தரப்பட்ட காலவரையறைக்குள் தொழில்நுட்பவியல் ரீதியாக கண்டறிந்து அதனை நடுவர் குழாமிடம் முன்வைத்தல் வேண்டும். மாணவர்களால் தரப்பட்ட தீர்வின் புதிதுத் தன்மை, அத்தீர்வின் விஞ்ஞான பின்னணி, தொழில்நுட்பவியல் ரீதியிலான அணுகுமுறை மற்றும் செயல்முறை ரீதியிலான சாத்தியத்தன்மை என்பவற்றின் அடிப்படையில் தீர்வினை நடுவர் குழாம் ஆராய்ந்து பின்பு தமது முடிவினை மாணவர்களுக்கு நடுவர் குழாம் தெரிவிக்கும்.

ஆரம்பத்தில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் நாடெங்கிலுமிருந்த பாடசாலைகளில் 20 இற்கும் அதிகமான பாடசாலைகளை சார்ந்த 100 இற்கும் அதிகமான மாணவர்கள் பங்குபற்றினர். பலாங்கொடை பிரதேசத்தை சார்ந்த ஆனந்த மைத்திரி பாடசாலை, மொறட்டுவ பிரதேசத்தை சார்ந்த பிரின்சஸ் ஒப் வேல்ஸ், குளியாப்பிட்டிய மத்திய கல்லூரி மற்றும் களுத்துறை கஹனோதயா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் அரை இறுதிச் சுற்றுக்கு தகுதியுடையதாகியது. அவற்றுள் பலாங்கொடை பிரதேசத்தை சார்ந்த ஆனந்த மைத்திரி பாடசாலை மற்றும் மொறட்டுவ பிரதேசத்தை சார்ந்த பிரின்சஸ் ஒப் வேல்ஸ் ஆகிய பாடசாலைகள் இறுதிச் சுற்றுக்குரிய வெற்றிக் கோப்பையை பெற்றுக்கொள்வதற்கான போட்டிக்கு தகுதியுடையதாகியது. போட்டியின் இறுதியில் பலாங்கொடை ஆனந்த மைத்திரி பாடசாலை முதலிடத்தை பெற இரண்டாவது வெற்றியாளர் இடத்தை மொறட்டுவ பிரின்சஸ் ஒப் வேல்ஸ் பாடசாலை பெற்றுக்கொண்டது.

வெற்றிகொண்ட மாணவர்களுக்கு ஆணைக்குழுவானது பெறுமதிமிக்க சான்றிதழ்கள், வெற்றிக் கோப்பைகள் மற்றும் பணப்பரிசுகளை வழங்கியது. இறுதி அரைச் சுற்றுக்கு தகைமையுடைய மாணவர்களுக்கு உயர் தேசிய எந்திரவியல் கற்கையினை பின்பற்றுவதற்கான புலமைப் பரிசினை அவுஸ்டன் முகாமைத்துவ நிறுவகம் வழங்கியது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சம்பத் வங்கியின் அனுசரணையுடன் முன்னளிப்பு திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.





உரு 08 உரு 09

உரு 08, 09: இளம் புத்தாக்குனர் கழக ரூபவாஹினி நிகழ்ச்சித் திட்டத்தின் போது இடம்பெற்ற விஷேட சந்தர்ப்பங்கள்.

## 2.4 "சஹசக் நிமவும்" – புத்தாக்கம், புதியன கண்டுபிடித்தல் மற்றும் போட்டிக்கான கண்காட்சி

புத்தாக்கம், புதியன கண்டுபிடித்தல் மற்றும் போட்டிக்கான தேசிய கண்காட்சியான "சஹசக் நிமவும்" கண்காட்சியானது முதன்முதலில் 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த தேசிய கண்காட்சியின் நோக்கானது, புத்தாக்குனர்களுக்கு அவர்களுடைய புத்தாக்கங்களை தேசிய மட்டத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு வாய்ப்புகளை வழங்கும் அதேவேளையில் முதலீட்டாளர்களை சந்திக்கவும் சந்தையில் புத்தாக்கத்திற்கான கேள்வியினை ஏற்படுத்தவும் அது போன்று தேசிய விருதுகளை வென்றெடுத்து சமுதாயத்தில் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளவும் அத்துடன் வர்த்தகமயப்படுத்துவதற்குரிய வாய்ப்பு வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் அதனைத் தொடர்ந்து சர்வதேச சந்தையில் முன்னிலைப்படுத்துவதற்கும் மற்றும் அவற்றிற்கு அத்துடன் அதிபுலமைச் சொத்து உரிமையை பெற்றுக் கொள்வதற்கும் ஏதுவாகின்றது.

புத்தாக்கம் மற்றும் புதியன கண்டுபிடித்தலிற்கான தேசிய கண்காட்சியான "சஹசக் நிமவும்" 2015 கண்காட்சியானது 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26, 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் இலங்கை கண்காட்சி மற்றும் சம்மேளன நிலையத்தில் இடம்பெற்றது. இந்தக் கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ. சுசில் பிரேமஜயந்த அவர்கள் கலந்துகொண்டதுடன் கண்காட்சிக்கு சகல மாகாணங்களையும் சேர்ந்த புத்தாக்குனர்கள் தத்தமது புத்தாக்கங்களுடன் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவகங்கள், வர்த்தகமயப்படுத்தப்பட்ட புத்தாக்கங்கள் மற்றும் பள்ளிக்கூடம் ஆகிய வகுதிகளில் கலந்துகொண்டனர்.



உரு 10



உரு 11



உரு 12



உரு 13

உரு 10, 11, 12 மற்றும் 13: புத்தாக்கம் மற்றும் புதியன கண்டுபிடித்தலிற்கான தேசிய கண்காட்சியான “சஹசக் நிமவும்” இல் விசேட சந்தர்ப்பங்கள்.

ஒவ்வொரு வகுதியின் கீழும் முன்னளிப்பு செய்யப்பட்ட புத்தாக்கங்கள் பற்றிய விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது. (அட்டவணை 2.4.1).

அட்டவணை 2.4.1– ஒவ்வொரு வகுதியின் கீழும் முன்னளிப்பு செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை

| வகுதி | புத்தாக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திறந்த | 79 |
| பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவகம் | 12 |
| வர்த்தகமயப்படுத்தப்பட்டவை | 10 |
| பள்ளிக்கூடம் | 123 |
| மொத்தம் | 224 |

இந்தக் கண்காட்சியின் போது புத்தாக்குனர்கள் தமது புத்தாக்கங்களை 13 துறைகளின் கீழ் முன்னளிப்பு செய்தனர். அவை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது. (அட்டவணை: 2.4.2).

அட்டவணை: 2.4.2 – புத்தாக்கங்கள் முன்னளிப்பு செய்யப்பட்ட துறைகள்

| | |
|---|---|
| துறை அ | அங்கவீனர்களை சுயாதீனமாக இயங்கக் கூடியவர்களாக்குதல் |
| துறை ஆ | சுற்றாடல் – சூழல் மாசுறலைத் தடுத்தல் / சூழல் பாதுகாப்பு / சூழலுக்கு உகந்த உற்பத்திகள் / சூழலியல் நிபந்தனைகளை மேம்படுத்துதல் |
| துறை இ | உணவுப் பண்டங்கள் – பானங்கள் / உணவுப் பேணுகை / போசன சாலைகளில் பாவிக்கும் கருவிகள் / பாரம்பரிய உணவு வகைகளில் புதியன கண்டுபிடித்தல் |
| துறை ஈ | விவசாயம் – பூந்தோட்டக் கலை / தோட்டக் கலை / தாவர பயிர்செய்கை |
| துறை உ | சுகாதாரம் மற்றும் போஷனை - மருத்துவம் / மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சைக்குரிய கருவிகள் |

| | |
|---|---|
| துறை ஊ | சக்தி – சக்தி வினைத்திறன்மிகு கருவிகள் / புதிய சக்தி மூலகங்கள் / புதுப்பிக்கத்தக்க சக்தி மூலகங்கள் |
| துறை எ | புகலிடம் – கட்டிடக்கலை/ மரதளபாட வேலை/ உலோக வேலை/ நிர்மாண கட்டிட பணிகள்/ தளபாடம் |
| துறை ஏ | தொழில்நுட்பவியல் கருவிகள் – சுய கற்கையாளருக்கான கருவிகள் மற்றும் மென் பொருள், விஞ்ஞானம் மற்றும் எண்கணிதவியலின் தத்துவங்கள் |
| துறை ஐ | பாதுகாப்பு – சமிக்ஞை / மீட்பு / அனர்த்த அறிவிப்பு |
| துறை ஒ | ஆடைத் தொழிற்துறை – புடவைகளும் துணையுறுப்புகளும், நகைகள் / கைப்பணிப் பொருட்கள் |
| துறை ஓ | தொடர்பாடல் மற்றும் களியாட்டம் – விளம்பரம் / அச்சிடல் / பொதியிடல் / விளையாட்டு / விளையாட்டுப் பொருட்கள் / கலைப்படைப்புகள் |
| துறை ஔ | போக்குவரத்து – மோட்டார் வாகனம் / கடற் பிரயாணம் / வான்வெளிப் போக்குவரத்து |
| துறை ஃ | நீர் / நீர் பேணுகை / நீர் தூய்மையாக்கல் / நீர் பாதுகாப்பு / மாசுறல் / நீரின் சிக்கன பாவனை |

“சஹசக் நிமவும் 2015” இல் ஒவ்வொரு வகுதியிலும் முன்னளிப்பு செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கையானது கீழே பட வரைபில் காட்டப்பட்டுள்ளது (பட வரைபு 2. 4. 3.).

பட வரைபு 2.4.3 – ஒவ்வொரு வகுதியிலும் முன்னளிப்பு செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை




**விருதுகளும் பரிசுகளும்**

தேசியக் கண்காட்சியான சஹசக் நிமவும் 2010 ஆம் ஆண்டு கண்காட்சிக்கு முன்வைக்கப்பட்ட படைப்புகள் யாவும் 21 பேரைக் கொண்ட அனுபவம் மிக்க நடுவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டது. அவர்களின் பரிந்துரைப்புடன் கீழ் குறிப்பிடப்பட்ட வேறுபட்ட விருதுகள் புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்டது.

விருது வழங்கல் வைபவமானது 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் செயற்குழு அறை ‘ஆ’ வில் இடம்பெற்றதுடன் இந்த மாபெரும் வைபவத்தில் விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அமைச்சர் கௌரவ. சுசில் பிரேம ஜயந்த பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

**டேசிஸ் விருது**

புத்தாக்கங்களுக்கும் புதுமை கண்டுபிடித்தலுக்குமான “சஹசக் நிமவும்” தேசிய கண்காட்சிக்குள் உள்ளடங்கும் வகுதிகளுக்குள் அடங்கும் புத்தாக்கங்கள் யாவற்றிலும் மிகச் சிறப்பானதிற்கு ‘டேசிஸ் விருது’ வழங்கப்பட்டது. டேசிஸ் விருது வெற்றியாளர்களுக்கு ரூபாய் 750,000/- காசுப் பரிசும் டேசிஸ் வெற்றிக் கோப்பையும் ஒரு சான்றிதழும் வழங்கப்படும். சஹசக் நிமவும் 2015 இல் டேசிஸ் விருதினை வெற்றிகொண்டவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது. (அட்டவணை 2.4.4)

அட்டவணை: 2.4.4 - டேசிஸ் விருதினை வெற்றிகொண்டவர்களின் விபரங்கள்

| **வகுதி** | **புத்தாக்கத்தின் பெயர்** | **புத்தாக்குனரின் பெயர்** |
|---|---|---|
| திறந்த | தகைமையற்றது | |
| பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவகம் | தகைமையற்றது | |
| வர்த்தகமயப்படுத்தப்பட்ட புத்தாக்கங்கள் | ஸ்மார்ட் சீலிங் மின் காற்றாடி கட்டுப்படுத்தி | பேரா. கெ.கெ.வை.டபிள்யு. பெரேரா |
| பள்ளிக்கூடம் (கனிஸ்ட டேசிஸ் விருதுகள் 03) | தன்னியக்க இடியப்ப இயந்திரம் | எ. நிபுன் எவோஷகா டி. சொய்சா<br>குருகுல வித்யாலய, களனிய. |
| | மின்னணுவியல் கம்பி மற்றும் நிறமாலைமான இயந்திரம் | நதீசா பண்டார தென்னகோன்<br>அரங்கல இரண்டாம் நிலை கல்லூரி, கொத்மலே. |
| | Hydraulic operated Vice | சனுஜா உடன்த அபயவிக்கிரம<br>தர்மாசோக வித்தியாலய, அம்பலாங்கொட. |

**தேசிய ரீதியில் முக்கியத்துவம் பெற்ற துறைகளுக்கான விருதுகள்**

தேசிய ரீதியில் முக்கியத்துவம் பெற்றதென இனம் காணப்பட்ட ஐந்து துறைகளின் கீழ் அடங்கும் புத்தாக்கங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது இந்த விருதுகளை பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடையதாய் கருதப்பட்ட புத்தாக்கங்களுக்கு ரூபாய் 200,000/- காசுப்பரிசும், வெற்றிக் கோப்பையும் மற்றும் ஒரு சான்றிதழும் வழங்கப்பட்டது. இதற்கமைவுற இரு புத்தாக்கங்கள் இந்தத் துறையின் கீழ் இனம் காணப்பட்டது.

**துறை விருதுகள்**

“சஹசக் நிமவும் – 2015” கண்காட்சியின் போது புத்தாக்குனர்களுக்கு அவர்களுடைய புத்தாக்கங்களை13 துறைகளின் கீழ் சமர்ப்பிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டதுடன் ஒவ்வொரு துறையிலும் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்ட புத்தாக்கங்களுக்கு பணப்பரிசு, பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட விருதுகளின் விபரங்கள் வருமாறு.

அட்டவணை: 2.4.5 – துறை விருதுகள்

| வகுதி | இடம் | பணப்பரிசு (ரூபாய்) | பதக்கம் | சான்றிதழ் |
|---|---|---|---|---|
| திறந்த | முதலாவது | ரூபாய். 100,000.00 | தங்கப்பதக்கம் | √ |
| | இரண்டாவது | ரூபாய். 50,000.00 | | √ |
| | மூன்றாவது | ரூபாய். 25,000.00 | | √ |
| பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி | முதலாவது | ரூபாய். 100,000.00 | தங்கப்பதக்கம் | √ |
| | இரண்டாவது | ரூபாய். 50,000.00 | | √ |
| | மூன்றாவது | ரூபாய். 25,000.00 | | √ |
| வர்த்தகமயப்படுத் தப்பட்டவை | முதலாவது | பணப்பரிசு உள்ளடக்கப் படவில்லை | தங்கப்பதக்கம் | √ |
| | இரண்டாவது | | | √ |
| | மூன்றாவது | | | √ |
| பள்ளிக்கூடம் | முதலாவது | ரூபாய். 25,000.00 | தங்கப்பதக்கம் | √ |
| | இரண்டாவது | ரூபாய். 15,000.00 | | √ |
| | மூன்றாவது | ரூபாய். 10,000.00 | | √ |

இதற்கமைவுற “சஹசக் நிமவும் – 2015” கண்காட்சிக்கு முன்வைக்கப்பட்ட புத்தாக்கங்களுக்குள் 64 புத்தாக்கங்களுக்கு விருது வழங்கப்பட்டது.




உரு 15






உரு 16 உரு 17

உரு 15, 16 , 17 என்பன விருது வழங்கல் வைபவத்தின் விசேட சந்தர்ப்பங்கள்.

## 2.5 புத்தாக்குனர்களுக்கான ஜனாதிபதி விருதுகள்

இலங்கை புத்தாக்குனர் கழகம் தாபிக்கப்பட்ட சட்டமான 1979ஆம் ஆண்டின் இல. 53 ஆம் இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்திற்கு அமைவுற இலங்கை புத்தாக்குனர் கழகமானது காப்புரிமை பெற்ற விண்ணப்பங்களுக்கு ஜனாதிபதி விருது வழங்குவதற்கு அதிகாரம் கொண்டுள்ளது.

இதற்கமைவுற, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் காப்புரிமை பெற்ற (2013 – 44 புத்தாக்கங்கள், 2014 – 17 புத்தாக்கங்கள்) 61 விண்ணப்பங்கள் ஜனாதிபதி விருது வழங்கலிற்கு தெரிவு செய்தல் நிமித்தம் சமர்ப்பிக்கப்பட்டது. அதி மேதகு ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட 15 பேரைக் கொண்ட நடுவர்களால் புத்தாக்க மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டது.

- விவசாயம்
- உணவுத் தொழில்நுட்பம்
- மருத்துவம்
- இறக்குமதி பதிவீடு
- பௌதிகவியல்
- எந்திரவியல்
- சக்தி
- போக்குவரத்து
- பாரம்பரிய மருத்துவம்
- மக்கள் நலன்புரி
- சூழல்
- கைத்தொழில் தொழில்நுட்பம்
- தேசிய பாதுகாப்பு
- கலை
- இரசாயனவியல்

2013 ஆம் ஆண்டிலிருந்து 18 புத்தாக்கங்களும் 2014 ஆம் ஆண்டிலிருந்து 11 புத்தாக்கங்களும் ஜனாதிபதி விருதுக்குரியனவாய் பரிந்துரைப்பு செய்யப்பட்டது.

அதி மேதகு ஜனாதிபதி அவர்களால் தலைமை தாங்கலுடன் ஜனாதிபதி விருது வைபவத்தை நடாத்துவதற்கு திகதி ஒன்றினை கோரி எழுதப்பட்ட கடிதமொன்று ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.



உரு 18



உரு 19

உரு 18, 19: ஜனாதிபதி விருதுக்குரிய புத்தாக்கத் தெரிவிற்கான நேர் காணலின் போது எடுக்கப்பட்டவை.

## 2.6 சர்வதேச புத்தாக்கம் மற்றும் புதுமை கண்டுபிடித்தல் கண்காட்சியில் புத்தாக்குனர் பங்குபெறல்

### 2.6.1 சுவிஸ்லாந்திலுள்ள ஜெனிவாவில் ஏப்ரல் மாதம் 15 – 16 ஆம் திகதி வரை

இடம்பெற்ற 43 வது ஜெனிவா சர்வதேச புத்தாக்க கண்காட்சியில் இலங்கை புத்தாக்குனர்களை பங்குபெறச் செய்வதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு ஏற்பாடுகளைச் செய்தது.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது பல குறிக்கோள்களை, அதாவது ஏனைய நாடுகளினைச் சார்ந்த புத்தாக்கங்களின் தரம் மற்றும் போட்டியிடக்கூடிய தகைமை என்பனவற்றை இனம் காண்தலாம். புத்தாக்கங்களை சர்வதேச கண்காட்சியில் முன்னளிப்பு செய்வதற்கு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், முதலீட்டாளர்களை தேட முடியும் என்பதுடன் சர்வதேச விருதுகளை பெற்றுக்கொள்ளவும் நம் தாய்நாட்டிற்கு அங்கிகாரத்தை தேடிக் கொடுக்கின்றது.

இதனைத் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டில் ஜெனிவாவில் இடம்பெற்ற சர்வதேச கண்காட்சியில் பங்குகொள்வதற்கு இலங்கை புத்தாக்கங்கள் ஐந்தினை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதியுதவியுடன் பங்குகொள்ளச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்தக் கண்காட்சியின்போது, இலங்கைப் புத்தாக்கங்கள் ஐந்திற்கும் தங்கப்பதக்கங்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இந்த கண்காட்சியில் பங்குகொண்ட புத்தாக்குனர்களின் விபரங்களும் அவர்கள் பெற்றுக்கொண்ட விருதுகளின் விபரங்களும் வருமாறு (அட்டவணை 2.6.1.1).

| புத்தாக்குனரின் பெயர் | புத்தாக்கம் | இடம் |
|---|---|---|
| டபிள்யூ. எஸ். ஆர். தாமல் கெ. ஜி. டி. டிவோன் லயன்த | Rail Gate Controlling System using Fuzzy Logic | தங்கப்பதக்கம் |
| கலாநிதி. ஆர். எம். எச். எம். எ. ஐ. ஹேரத் | Peripheral Nerve Stimulator Needle with Extended Function | ஜூரிகளின் விசேட பரிந்துரைப்புடன் தங்கப் பதக்கம் |
| எம். ஐமன் பெரோஸ் | Smart Intelligent Jacket that uses body heat to charge batteries | தங்கப்பதக்கம் |
| அனுர சூரிய ஆராய்ச்சி | Safety Coconut Husk Feeding Mechanism to extract Bristol Fibre from Traditional Extraction Process | தங்கப்பதக்கம் |
| கலாநிதி. கெ. டி. டி. கஹாதுவ | Diabetic Foot Assessment Solution Temperature and Vibration Combo for Home Assessment Diabetic Foot | ஜூரிகளின் விசேட பரிந்துரைப்புடன் தங்கப் பதக்கம் |



உரு 20




உரு 21

உரு 20, 21: ஜெனிவா புத்தாக்க கண்காட்சியில் தங்கப்பதக்கங்களை வென்ற புத்தாக்குனர்களும் அவர்களின் பதக்கங்களும் சான்றிதழ்களும்.

## 2.7 புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துவதில் துணைமை

### 2.7.1 புத்தாக்குனர் நிதியம்

புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துவதற்கு நிதியம் வழங்குவதனூடாக உதவுதல் என்ற குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டு 2014 செப்டெம்பர் மாதம் “Invent 2014” என்ற நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 83 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன் அவை 2015 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டது. “தன்னியக்க மின்வலியளவு பாதுகாப்பு முறைமை” (Automatic Voltage Security System) எனும் புத்தாக்கம் வர்த்தகமயப்படுத்தல் பொருட்டு நிதியீடு செய்யப்படுவதற்காக தெரிவுசெய்யப்பட்டதுடன் இதன் நிமித்தம் ரூபாய் 400,000/- வழங்கப்பட்டது.

### 2.7.2 வியாபார பிரேரணைகளை தயாரித்தல், சந்தைப்படுத்தல் மற்றும் வினைமுயலுமை என்பவை தொடர்பில் புத்தாக்குனர்களுக்கு விழிப்புணர்ச்சி கூட்டத் தொடர்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, புத்தாக்குனர்களுக்கான ஒரு விழிப்புணர்ச்சி பயிற்சிக் கூட்டத்தொடரினை இலங்கை சந்தைப்படுத்துகை நிறுவகத்துடன் கூட்டிணைந்து 2015 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி, இலங்கை சந்தைப்படுத்துகை நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்துகிறது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்போது KENT நிறுவகத்தின் தலைவர் திரு. காமினி சப்பரமாது, 3D கொன்செப்ட் ஸ்டுடியோ இனது சிரேட்ட நிறைவேற்றுனர் திரு. நிசங்க வர்ணபுர, எட்னா கம்பனியின் வியாபார மற்றும் சந்தைப்படுத்துகை நிறைவேற்றுனர் திரு. கெலும் ஹேவாவசம் மற்றும் வினைமுயலுனர் நிஷான் பமுனுஆராய்ச்சி ஆகியோர் புத்தாக்குனர்களுக்காக உரையாற்றினர். இதைவிட இந்தக் கூட்டத்தொடரின் போது ஆணைக்குழுவின் நிதி அலுவலர் திருமதி. நதிஷா சதுரங்கி “காசுப் பாய்ச்சல் பாதீடு” எனும் தலைப்பில் உரையாற்றினார்.



உரு 22




உரு 23

உரு 22, 23: இலங்கை சந்தைப்படுத்துகை நிறுவகத்தில் நடாத்தப்பட்ட விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் போது எடுக்கப்பட்ட சில நிகழ்வுகள்

2.7.3 புத்தாக்குனர்களுக்கு Air time பெற்றுக்கொள்வதற்கு துணைமை

இலங்கை புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களுக்கு ஒரு பிரசாரத்தை வழங்கும் முகமாக, புத்தாக்குனர்கள் ரூபவாஹினி அலைவரிசையில் ஒளிபரப்பப்படும் “வியாபாரிக லோகய” (வியாபாரிகளின் உலகம்) எனும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர். இதைவிட, ஆணைக்குழுவானது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் “அபே ஹபனு” நிகழ்ச்சித் திட்டத்திலும் மற்றும் “ரங்கிரி FM” இல் “ரிதி புவத்” நிகழ்ச்சித் திட்டத்திலும் தம்முடைய புத்தாக்கங்கள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கினர்.

2.7.4 கூட்டுறவுத் துறையிடமிருந்து ஆதாரச் சேவைகள்

ஆணைக்குழுவிற்கு தனியார் துறையினரால் அறிமுகப்படுத்தப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட புத்தாக்குனர்களுக்கு தமது புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு தனியார் துறை கம்பனிகளிடமிருந்து துணைமைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

அ) திரு. செக்கி லதீப் என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்ட “தோல் நோய்களுக்கான மூலிகை மருந்து. இதனை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு, த லங்கா ஏன்ஜல் நெட்வர்க் (LAN) நிதியீடு செய்த்துடன் இது தற்போது பாரிய அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது.



உரு 24

உரு 24: நிதியீடு செய்யும் LAN கம்பனியிடமிருந்து திரு. செக்கி லதீப் விருது வாங்கும் சந்தர்ப்பம்.

ஆ) திரு. டபிள்யூ. வெல்கம என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்ட ‘சூரிய விளக்கு’. வடமத்திய மாகாணத்தில் மின்சார வசதியின்றி வாழும், குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களுக்காக கண்டுபிடிக்கப்பட்டது. இதனை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு ஜினசேன குரூப் நிறுவகத்தின் துணை நிறுவனமான ஜினசேன புத்தாக்க மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் நிதியீடு செய்யும்.



உரு 25

உரு 25: சூரிய விளக்குகளை பகிரும் நிகழ்வின் போது.

இ) திறந்த பல்கலைக்கழகம், மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவகம் அத்துடன் வர்த்தகமயப்படுத்தப்பட்ட புத்தாக்கங்களும் பள்ளிக்கூடங்களும் ஆகிய சகல வகுதிகளிலும் 1ஆம் 2ஆம் மற்றும் 3ஆம் இடத்தை சூழல், சக்தி, ஆடை மற்றும் புடவைக் கைத்தொழிற் துறையில் பெற்றுக்கொண்ட புத்தாக்குனர்களுக்கு தேசிய கண்காட்சியான சஹசக் நிமவும் 2015 கண்காட்சியில் விருதுகள், பதக்கங்கள் வழங்க ரூபாய் 435,000/- அநுசரணையானது பிரண்டிக்ஸ் நிறுவகத்தினால் செய்யப்பட்டது.

## 2.8 மனிதவள அபிவிருத்தி

இலங்கை புத்தாக்குனர்களுக்கு தரமான வினைத்திறன் மிகு சேவையை வழங்குவதற்காக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினை சார்ந்த பதவியணியினருக்கு, வலுவூட்டும்

நோக்குடன் வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களாவன இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைவுற, 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் மூன்று அலுவலர்கள் பங்குபற்றினர். (PARG சேவைகள் தனியார் நிறுவகம் – 2 நிகழ்ச்சித்திட்டங்கள், திறன் அபிவிருத்தி நிதியம் – 1 நிகழ்ச்சித்திட்டம்).

திருமதி சம்பிகா விஜேதுங்க, ஆசியா பசுபிக் வலயத்தின் ICANN SSR முகாமையாளரினால் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினைச் சேர்ந்த சகல பதவியணியினருக்காகவும் கணணித் துறையுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.

காப்புரிமைத் தகவல்களை தேடல் மற்றும் காப்புரிமை விண்ணப்பமொன்றை வரைவு செய்தல் தொடர்பில் பயிற்சியினை புத்தாக்குனர்களுக்கு வழங்குதல் பொருட்டு, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது தேசிய அதிபுலமைச் சொத்து அலுவலகத்துடன் (NIPO) வேறு இரு அலுவலகத்துடனும் இணைந்து ஒரு தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்க ஆதார நிலையத்தை ஸ்தாபித்தது.



உரு 26: இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினை சார்ந்த அலுவலகர்களுடன் விஞ்ஞான தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சின் அமைச்சர் கௌரவ. சுசில் பிரேமஜயந்த மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலக்ஷ்மி ஆகியோரை படத்தில் காணலாம்.

# நிதியியல் கூற்று 2015 (மீள்குறிப்பீடு)

2015 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்குரியது

# இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

# நிதியியல் நிலைமைக் கூற்று

| டிசம்பர் 31 இல் உள்ளவாறாக | குறிப்புகள் | 2015 (மீள்குறிப்பீடு) இலங்கை ரூபாய் | 2014 (மீள்குறிப்பீடு) இலங்கை ரூபாய் |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடப்புச் சொத்துகள்** | | | |
| காசும் வங்கி மீதியும் | 9 | **15,143,235** | 12,209,207 |
| ஏனைய பெறுகைகள் | 7 | **11,322** | 845,080 |
| தேர்தல் ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொண்டவைகள் | | **-** | 13,525 |
| பண்டிகை முற்பணம் | | **4,550** | 15,300 |
| மீளளிக்கத்தக்க வைப்புகள் | 8 | **1,100,000** | 1,865,674 |
| அனர்த்தக் கடன் | | **160,063** | 150,540 |
| தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டயவை | | **7,560** | 7,560 |
| ஏனைய முற்பணங்கள் | | **136,633** | 136,633 |
| கடன் புத்தாக்குனர் நிதியம் | | **9,445,281** | 9,417,723 |
| ஏனைய ஒப்பந்த சேவைகளுக்கான முற்பணம் | | **341,088** | 341,088 |
| (கழிக்க) ஐயக்கடன் கடன்பட்டோர் ஒதுக்கீடு (100%) | 12 | **(9,802,964)** | (9,317,683) |
| வாடகை முற்பணம் | | **2,675,893** | 2,700,000 |
| எரிபொருள் வைப்பு | | **100,000** | 100,000 |
| காகிதாயிகள் இருப்பு | 14 | **120,240** | 85,930 |
| | | **19,442,901** | **18,570,576** |
| **நடப்பல்லாத சொத்துகள்** | | | |
| கடன் புத்தாக்குனர் நிதியம் | | **288,860** | 16,458 |
| அனர்த்தக் கடன் | | **458,652** | 540,646 |
| சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள் | 5 | **6,556,417** | 8,950,301 |
| | | **7,303,929** | **9,507,405** |
| **மொத்தச் சொத்துகள்** | | **26,746,830** | **28,077,981** |

**நிதியம் மற்றும் பொறுப்புகள்**

**நடப்பு பொறுப்புகள்**

| | | | |
|---|---|---|---|
| செலுத்தப்படவேண்டிய ஏனையவைகள் | 11 | **3,200** | 91,481 |
| நிலுவைச் செலவினங்கள் | 10 | **1,538,745** | 487,409 |
| | | **1,541,945** | 578,890 |
| **நடப்பல்லா பொறுப்புகள்** | | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 6 | **2,238,205** | 1,835,385 |
